**பெருநகர சென்னை மாநகராட்சி**

**செய்தி வெளியீடு**

**செ.வெ.எண்.115** **நாள்: 03.06.2025**

**திரு.வி.க. நகர் மண்டலத்திற்குட்பட்ட நேர்மை நகர் மயானபூமியின் தகனமேடையில் பழுதுகளை சரிபார்க்கும் பணிகள் தொடர்ந்து நடைபெற்று வருவதால், பொதுமக்கள் தாங்கல் மயானபூமியினைப் பயன்படுத்திக் கொள்ளுமாறு தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.**

பெருநகர சென்னை மாநகராட்சி, திரு.வி.க.நகர் மண்டலம், வார்டு-66க்குட்பட்ட நேர்மை நகர் மயானபூமியில் உள்ள எரிவாயு தகனமேடையின் புகைபோக்கி பழுதுகளை சரிபார்க்கும் பணிகள் நடைபெற்று வருவதால், 28.05.2025 முதல் 04.06.2025 வரை மேற்கண்ட மயானபூமியில் எரிவாயு தகனமேடை இயங்காது என ஏற்கனவே தெரிவிக்கப்பட்டிருந்தது.

தற்போது, இந்த மயானபூமியில் பழுதுகளை சரிபார்க்கும் பணிகள் தொடர்ந்து நடைபெற்று வருவதால் 05.06.2025 முதல் 14.06.2025 வரை மேற்கண்ட மயானபூமி இயங்காது.

எனவே, மேற்கண்ட மயானபூமியில் பழுதுபார்க்கும் பணிகள் நடைபெறும் நாட்களில் பொதுமக்கள் அருகிலுள்ள வார்டு-67க்குட்பட்ட தாங்கல் மயானபூமியினைப் பயன்படுத்திக் கொள்ளுமாறு தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

**செய்தி வெளியீடு** : **இணை இயக்குநர் / மக்கள் தொடர்பு அலுவலர்,**

**பெருநகர சென்னை மாநகராட்சி**